Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 07 (10.05.2003) சனிக்கிழமை இதழ் : 218

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-884)

# சமாதானப்பேச்சின் முடக்கத்திற்கு காரணங்களை அறிந்துவிட்டோம்!

## ஜப்பான் புறப்பட முன் அகாஷி தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலை அடைந்தமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு என்பதைக் கண்டறிந்துள்ளோம். உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீள்குடியேற்றத்தில் ஏற்பட்ட பிரச்சினையும், சிறான் செயற்பாடு முடங்கியுள்ளதால் ஏற்பட்ட சிக்கலுமே பேச்சுக்கள் நகர முடியாமலிருப்பதற்கான காரணங்கள் என, ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி தெரிவித்துள்ளார்.**

நேற்று, ஜப்பானுக்குப் புறப்பட முன்னர் கொழும்பில் செய்தியாளர்களிடையே பேசிய அகாஷி -

'எதிர்வரும் ரோக்கியோ மாநாடு நடைபெறுவதற்கு முன், பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் என நான் நம்புகிறேன்.

20 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவந்த பரஸ்பர நம்பிக்கையின்மையும் அபிப்பிராயபேதமும் - அரசாங்கத்தினாலும், விடுதலைப் புலிகளினாலும் குறுகிய காலத்திற்குள் மறக்கப்பட்டுவிடும் என நான் கருதவில்லை' என்று தெரிவித்தார்.



இத்தகைய நெருக்கடிகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை இசையச்செய்ய சர்வதேச சமூகம் திட்டம்!

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வைக்க, உடன்பாட்டுக்கு கொண்டுவரும் முயற்சியில், சர்வதேச நாடுகள் சில திட்டங்களை வகுத்துள்ளன். இதுதொடர்பாக, பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வரவிருக்கின்றனர் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தாமதமடைவதற்கு சில நடைமுறைச் சிக்கல்களே காரணம். தற்போதுள்ள நடைமுறைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவில் புதிய நாடு; அரசு-புலிகள் சம்மதம் வேண்டும்!

### நம்பியார் அறிக்கைக்கு ரெலவ்சன் பதில்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் - மாற்றமேதும் கொண்டு வருவதாயின், அதனை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சம்மதத்துடன்தான் செயற்படுத்த முடியும் என கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில், இந்தியாவையும் சேர்ப்பது குறித்து- இந்திய முன்னாள் இராணுவ உயரதிகாரி நம்பியார் தனது அறிக்கையில் பிரஸ்தாபித்திருப்பது குறித்து கருத்துவெளியிடும்போதே ரெலவ்சன் இவ்வாறு குறிப்பிட்டார்.

கண்காணிப்புக்குழுவில் வேறு நாடுகளும் இணைத்துக்கொள்ளப்படவேண்டும் என, நம்பியாரின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையில் ஆலோசனை கூறப்பட்டிருந்தாலும், கண்காணிப்புக்குழுவில் தற்போதுள்ள ஸ்கண்டிநேவிய நாடுகளின் உறுப்பினர்களைத் தவிர, மேலும் உறுப்பினர்களை சேர்ப்பதற்குப் போதிய வசதிகள் இல்லையெனவும் ரெலவ்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

### நம்பியாரின் அறிக்கை புலிகளிடம் கையளிக்கப்படவில்லை!

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி ஆய்வு செய்த, இந்திய இராணுவ உயர் அதிகாரி சதீஷ் நம்பியாரின் அறிக்கை, விடுதலைப் புலிகளிடம் உத்தியோகபூர்வமாக நேற்றிரவுவரை கையளிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



நெதர்லாந்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற 'தாயகப் பரணி' இசைநிகழ்வில் ஈழத்துத் தமிழ்க் கலைஞர்கள்.

## மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய சிறுமி

பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிய சிறுமி, வீட்டினுள் சுருக்கிட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் - எழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த சிவஈஸ்வரி (வயது 13) என்ற சிறுமியே மரணமானவராவார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

சம்பவதினம் சிறுமியின் தாயார் தோட்டத்திற்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பிவந்தபோது - பாடசாலை சென்றுவிட்டுத் திரும்பிய அவரது மகள், வீட்டின் வளையில் சுருக்கிட்டுத் தொங்கியவாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உண்மையை விளங்கிக்கொள்ளுறது மட்டுமில்லை உதவவும் வேணும் உலகம்.

## சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச ஆதரவு தேவை!

### நோர்வே பிரதியமைச்சர் ஹெல்கிஸன்

(ஒஸ்லோ)

தற்போது முடங்கியுள்ள இலங்கைக்கான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க, சில நாட்கள் எடுக்கலாம் எனினும், சமாதான முயற்சிக்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் ஆதரவளிக்க வேண்டுமென நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இக்காலப்பகுதியில் அனைத்துத் தரப்புகளும் - தமது பங்கு குறித்து ஆராயவும், மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்க என்ன செய்யலாம் என்பதைச் சிந்திக்கவும் நேரத்தைச் செலவிடவேண்டும் . நாம் கவனமாக நடக்கவேண்டியுள்ளது. ஏனெனில், தப்பபிப்பிராயங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என ஹெல்கிசன் கூறினார்.

### சங்கரத்தையில் திருடர்களிடமிருந்து

## தம்பதியைக் காக்க முயன்ற இளைஞன் வாள்வெட்டில் காயம்

திருடர்களிடம் சிக்கிய தம்பதியினரைக் காப்பாற்ற முற்பட்ட இளைஞன், அத்திருடர்களின் வாள்வெட்டில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் வட்டுக்கோட்டை சங்கரத்தையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த தவராசா ரவீந்திரன் (வயது 29) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவராவார்.

நேற்றிரவு - நவாலி, வழுக்கியாறு ஊடாக வட்டுக்கோட்டைக்குச் சென்றுகொண்டிருந்த ஆசிரியர் ஒருரையும், அவரது மனைவியையும் வழி மறித்து, ஒருகுழு திருடமுயன்றது. இதன்போது தப்பித்துக்கொள்வதற்காக ஆசிரியரும் மனைவியும் அபயக்குரல் எழுப்பினர்.(10 ஆம் பக்கம் பார்க்க)




2 ஆவது உலக இந்து மாநாட்டின், யாழ். பிராந்திய மாநாடு நேற்று ஆரம்பமானபோது, நடைபெற்ற பேரணியில் ஒரு காட்சி.

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290 (சி.913 )

# நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற யாழ். பிராந்திய உலக இந்து மாநாட்டிலிருந்து...









மேல் வரிசையில்:- இரண்டாவது உலக இந்து மாநாட்டின் யாழ். பிராந்திய மாநாட்டையொட்டிய எழுச்சிப் பேரணியில் பங்குபற்றிய அமைச்சர் மகேஸ்வரனையும், சிவாச்சாரியார்களையும் முதல் படத்திலும், அமைச்சர் மகேஸ்வரன் மாநாட்டுக் கொடி ஏற்றுவதை இரண்டாவது படத்திலும், எழுச்சிப் பேரணியில் பங்கேற்ற ஊர்தியொன்றை மூன்றாவது படத்திலும் காணலாம்.
கீழ் வரிசையில்:- நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற மாநாட்டில் தமிழகப் பேராசிரியர் சுந்தரமூர்த்தி உரையாற்றுவதை முதற்படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்
(படங்கள் - ராஜ்குமார்)


## Jaffna College Institute of Technology
## Vaddukoddai, Sri Lanka

*The following courses Commence from middle of May 2003*
*Get Open University exemptions with Our Diplomas*

**Diploma Courses:-**
* Diploma in Computer Programming & Data Processing
* Diploma in Draughtsmanship (Civil) Duration: 1Year (full time)
* Electrical. Power
* Telecommunications and Electronics Duration: 3 Year (full time)

**Certificate Courses in Business & Scientific Applications**
* MS Word
* MS Excel
* MS Access
* Pascal
* C/C++
* Visual Basic 6.0
* MS Powerpoint
* Computer Hardware
* JAVA
* Certificate Courses in Printing Technology (Includes Adobe PageMaker, CorelDraw, Adobe PhotoShop)

Duration: 3-4 Months

**NOTE:-**
* Member of Association of Computer Training Organisation (ACTOS)
* Educational Affiliate of British Computer Society
* Our Diplomas Guide the Students to the Examinations of the following bodies
  * **ENGINEERING COUNCIL OF LONDON**
  * **CITY & GUILDS OF LONDON INSTITUTE**
  * **AUSTRALIAN COMPUTER SOCIETY (ACS)**
  * **BRITISH COMPUTER SOCIETY (BCS)**

* **Facilities**
  * Library, Hostel & Sports

***Application forms are available at***
* **JCIT, Vaddukoddai**
* **Undergraduate department, Jaffna College**
*(Hospital Road, Jaffna)*

(சி/902)

**DIRECTOR**
**Jaffna College Institute of Technology Vaddukoddai.**

Email:- jcit@sltnet.lk

Tel.Phone:- 070-213139



**DIPLOMA IN PSYCHOLOGY**

HSCMF - 5 ஆவது பிரிவிற்கான கற்கைநெறிக்கு A/L தரத்திற்கு மேல் கற்றுத்தேறியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது. விண்ணப்பம் செய்வோர் முத்திரையுடன், சுயமுகவரி இடப்பட்டதும், 50/= ஆன காசுக்கட்டளையையும் உடன் அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.
DIRECTOR, HSCMF, NAVALY NORTH, MANIPAY.
Clo. Date (14.06.03) (சி-917)


### யுனெஸ்கோ அதிகாரிகள் வருகை

நவீனமயமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்ற யாழ். நூல்நிலையத்தினைப் பார்வையிடுவதற்காக யுனெஸ்கோ அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.


**THE ROYAL COLLEGE OF JAFFNA**
SPOKEN ENGLISH WITH GRAMMER
*N. VIGNESWARAN ARCHERY*
BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S. ROAD,
JAFFNA.
(சி-891)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
சிவாஜி, பத்மினி நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
**CHINA STRIKE FORCE**
(சி-882)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின் நடித்த
(சி-883)

**புதிய கீதை**
10.30, 2.30, 6.30, 9.30



**ஈவினை மத்தி**
**அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம்**
2 ஆவது உலக இந்துமாநாட்டை ஒட்டி இடம் பெறும் விசேட நிகழ்ச்சி.
காலம்:- இன்று (10-05-2003) சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3.00 மணி
விஷேடபூஜை, பிரார்த்தனை, சொற்பொழிவு என்பன இடம்பெறும்.
விநாயகர் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.
இங்ஙனம்
சைவபரிபாலனசபை
(342)

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|
| திரு.ச.இரத்தினலிங்கம் | திரு.ப.நகுலேஸ்வரன் | திரு.பொ.கிருஷ்ணதாசன் |



**இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டுகின்றோம்.**

அறங்காவல் சபை,
அருள் தரு கேணியடி காளி அம்பாள் தேவஸ்தானம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(341)

# அண்மைய கொலைகளுக்கு கண்காணிப்புக்குழு கண்டனம்

கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் தொடர்ச்சியாகக் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் போர்நிறுத்த உடன்பாட்டுக்குத் தீவிர அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அச்சம் - மக்கள் மத்தியில் பரவினால், அமைதி முயற்சிகளை அது பாதிக்கும். எனவே, இந்த வகையான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்.

அரசாங்கத்துக்கு உதவுவோர் கொல்லப்படுவது பற்றிப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இது குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தனிப்பட்ட புகார்களைச் செய்துள்ளனர்.

வடக்கிலுள்ள அரசியற்கட்சிகள் - தமது அலுவலகங்கள், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களின் குடும்பங்கள் தாக்கப்படுவதாகவும் புகார் செய்துள்ளன. இவற்றுள் பெரும்பாலானவற்றைப் புலிகள் செய்திருப்பதாகவே புகார் செய்யப்பட்டுள்ளது. ஆனால், புலிகள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதுகுறித்து விசாரணைகளை நடத்தியபோதும், புலிகள் இக்கொலைகளில் சம்பந்தப்பட்டதான எந்த ஆதாரமும் கண்டறியப்படவில்லை என்று கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு ஜனாதிபதி அனுமதிக்கமாட்டார்

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒருபோதும் இடமளிக்கமாட்டார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சமாதான முன்னெடுப்புத் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரை மீதான விவாதம் நேற்றுமுன தினம் இடம்பெற்றபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் -

நாட்டைப் பிளவுபடுத்தப் பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா இடமளிக்கமாட்டார்.

தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தையும் பயனபடுத்தி - நாட்டின் இறைமையையும், தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுப்பார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் ஐ.தே.க. அரசாங்கம், பொதுஜன ஐக்கிய முன்னணியால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் எவ்வளவு நிதியை செலவிட்டுள்ளது?

## ஆவணப்படுத்தக் கோருகிறார் விமல் வீரவன்ச



(கொழும்பு)

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமாதான நடவடிக்கைகளுக்காக, அரசாங்கம் எவ்வளவு பணத்தைச் செலவு செய்துள்ளது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேட்டுள்ளார்.

தற்போதைய சமாதானநிலை பற்றிய பிரதமரின் உரை தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தின்போது, விமல் வீரவன்ச இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்குப் பெருமளவு நிதி அரசினால் செலவு செய்யப்படுகிறது. நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு இதுவரை எவ்வளவு பணத்தினை அரசாங்கம் செலவழித்துள்ளது என்பது பற்றி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் (01)

# சமாதான முயற்சியைக் குழப்ப எதிர்க்கட்சிகள் முனைகின்றன!

## நீதியமைச்சர் நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க, எதிர்க்கட்சிகள் முனைவதாக நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக விரிவான விளக்க அறிக்கை ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

பிரதமரின் இந்த விளக்கவுரை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சிறப்பு விவாதம் ஒன்று இடம்பெற்றது. இந்த விவாதத்தை முடித்து வைத்துப் பதிலுரையாற்றியபோது நீதியமைச்சர் லொக்குபண்டார மேலும் குறிப்பிட்டதாவது -

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஜே.வி.பியின் செயற்பாடுகள் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலைத் தருகின்றன.

அனைத்துக் கட்சிகளும் இந்தச் சமாதான முயற்சிகள் வெற்றிபெற ஒத்துழைக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்த விவாதத்திற்கு - அமைச்சர் லொக்குபண்டார பதிலுரையாற்ற எழுந்ததும், எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அல்லது சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரச பிரதிநிதி ஒருவரே பதிலுரை ஆற்றவேண்டும் என வற்புறுத்தினர்.

எனினும், நீதி அமைச்சர் லொக்குபண்டாரவே பதிலுரையாற்றியதால், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது உரையைப் புறக்கணித்து நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறிச்சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக சாதனைக்கு முயற்சி

(நவிண்டில்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு - அல்வாய் குமிழடி அதிசய விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று இரவு 8.30 மணிமுதல் நடைபெறும் சிறப்பு நிகழ்வில் -

சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்- மகாபாரதம் என்ற பொருள் பற்றி எட்டரை மணித்தியாலம் தொடர் சொற்பொழிவாற்றி உலகசாதனை நிகழ்த்தவிருக்கிறார். (116)

# மாணவி வாங்கிச்சென்ற பணிஸுக்குள் அட்டை;

(வடமராட்சி)

கரணவாயில் வர்த்தக நிலையம் ஒன்றில் விற்கப்பட்ட பணிஸுக்குள் இரண்டு அட்டைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மாணவி ஒருவர் பணிஸைப் பிரித்து உட்கொள்ள முனைந்தபோதே அதில் இரு அட்டைகள் இருந்தமை தெரியவந்தது.

உடனடியாக மாணவியின் தாயார் அந்த பணிஸை வடமராட்சி அரசியற்துறையினரிடம் கொண்டுசென்று புகார் செய்தார். இதையடுத்து - வடமராட்சி அரசியற்துறையினரால் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கரணவாய்ப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் - குறிப்பிட்ட வர்த்தக நிலையம் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

# மூன்று செய்தி நிறுவனங்கள் மீது மானநஷ்டம் கோருகிறார் மாரப்பன



(கொழும்பு)

பில்லிசூனிய ஒழிப்புக்காகப் பாதுகாப்பு அமைச்சர் - சமயச் சடங்குகளை நடத்தியதாகச் செய்தி வெளியிட்ட மூன்று செய்தி நிறுவனங்கள் மீது மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் மற்றும் உபாலி பத்திரிகை நிறுவனம், விஜயா பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றின் மீதும், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அமால் ஜெயசிங்கவுக்கும் எதிராகவே மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஏ.எவ்.பி. நிறுவனமும் அமால் ஜெயசிங்கவும் தலா 500 மில்லியன் ரூபாவும், உபாலி மற்றும் விஜயா பத்திரிகை நிறுவனங்கள் தலா 100 மில்லியன் ரூபாவும் நஷ்டஈடு தரவேண்டுமென திலக் மாரப்பனவின் சட்டத்தரணி போல் ரட்ணாயக்க கோரியுள்ளார்.

தமது அறிவிப்புக்கு 14 நாட்களுக்குள் பதில் தரப்படாவிட்டால், நீதிமன்றத்தில் மானநஷ்ட வழங்குத் தாக்கல் செய்யப்படுமெனவும், மேற்படி நிறுவனங்கள், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குத் திட்டமிட்டுக் களங்கத்தை ஏற்படுத்த முனைந்துள்ளதாகவும் சட்டத்தரணி போல் ரட்ணாயக்க மேலும் தெரிவித்தார்.

# வெளி மாகாணத்தில் நியமனம்பெற்ற 138 ஆசிரியர்கள் வடக்கு - கிழக்குக்கு!

## விரும்பினால் இடமாற்றம் கோரலாம்

தேசிய கல்வியியல் கல்லூரியில் பயின்று, வட - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள், மீளாய்வு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 138 பேர், வேறு மாகாணங்களில் ஆசிரிய நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் - தமது நியமனங்கள் தொடர்பாக கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்தே, இந்த நியமனங்களை மீளாய்வு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கும்போது, அதை நிரப்பாமல் இப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வெளி மாகாணங்களில் நியமனம் வழங்கியது தவறு எனக் கல்வி அமைச்சரிடம் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகார் செய்திருந்தனர்.

வெளி மாகாணங்களில் நியமனம் செய்யப்பட்ட 138 ஆசிரியர்களும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பணியாற்ற விரும்பினால், கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அமரசிங்க அறிவித்துள்ளார்.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம்செய்த எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினர் - அங்குள்ள முதியோர் இல்லத்தைப் பார்வையிடுவதை முதலிரு படங்களிலும், கிளிநொச்சி வதிவிடப் பயிற்சி நிலையத்தைப் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சீன ட்ரோலர் மீதான தாக்குதல்; மூன்றாம் தரப்பு சம்பந்தமில்லை!

## ஜனாதிபதியிடம் கடற்படை அறிக்கை சமர்ப்பிப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன ட்ரோலர் தாக்கப்பட்ட சம்பவத்துடன், மூன்றாம் தரப்பு எதுவும் சம்பந்தப்படவில்லை. நேரடியான சாட்சியங்கள் கிடைக்காவிடினும், சூழ்நிலை ஆதாரங்கள் - இத்தாக்குதலை விடுதலைப் புலிகளே செய்திருப்பதாகச் சுட்டுகின்றன எனக் குறிப்பிட்டு, கடற்படை தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

சீன ட்ரோலர் தாக்கப்பட்ட சம்பவத்தில் - மூன்றாம் தரப்பு சம்பந்தப்பட்டிருப்பதாகக் கண்காணிப்புக் குழு விடுத்த அறிக்கையை ஏற்க மறுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கடற்படையை விசேட விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி - கடற்படை நடத்திய விசாரணையின் அறிக்கை, ஜனாதிபதியிடம் மூன்று தினங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சீன மீன்பிடி ட்ரோலரான 'வூ-யுங்-யு 225' - கடந்த மார்ச் மாதம் தாக்கப்பட்டதில் சீன நாட்டவர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

### அகில இலங்கை ரீதியில்

# சிறந்த மாணவர் தலைவனாக யாழ்.இந்துக்கல்லூரி மாணவன்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில், தேசிய மட்டத்தில் நடைபெற்ற பயிற்சிப் பாசறையொன்றில், யாழ்.இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் குமாரவடிவேல் குருபரன் - அகில இலங்கை சிறந்த மாணவர் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் - தேசிய சமாதான செயற்திட்டப் பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ஒருமைப்பாடு, சமாதானம் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய இரண்டுநாள் பயிற்சிப்பாசறை, கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் கடந்த மாதம் முதல் வாரத்தில் நடைபெற்றது.

நாட்டின் பல பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எழுபதிற்கும் மேற்பட்ட மாணவர் தலைவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

இப்பட்டறையில் பங்குபற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் தெரிவாகியிருந்தனர். பணியகத்தால் பிரதேச வாரியாகப் பாடசாலை மாணவர் தலைவர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்குகளில், வெளிப்படுத்தப்பட்ட திறமைகளின் அடிப்படையில் தேசிய மட்டப் பயிற்சிப் பாசறைக்கு மாணவத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பயிற்சிப்பட்டறையின் இறுதியில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் வைபவத்தில், அகில இலங்கை சிறந்த மாணவர் தலைவனாக (All Island Best Prefect) யாழ்.இந்துக்கல்லூரியைச் சேர்ந்த குமாரவடிவேல் குருபரன் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அழகியல் சார்ந்த திறமைக்கான விருது தெபரவெவ தேசிய பாடசாலை மாணவி செல்வி அனோமா டில்கானிக்கு வழங்கப்பட்டது.



அகில இலங்கை சிறந்த மாணவர் தலைவனுக்கான விருதை யாழ். இந்து மாணவன் குமாரவடிவேல் குருபரனுக்கு தேசிய ஒருமைப்பாட்டு செயற்திட்டப் பணிப்பாளர் கலாநிதி திலோகசுந்தரி காரியவாசம் வழங்குவதை முதலாவது படத்திலும், யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற மாணவர் தலைவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : செ.சௌமியா
முகவரி : ஆனைக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்



----------------
பெற்றார் ஒப்ப..


# சின்னஞ்சிறு செய்திகள்

### பாடசாலை இடம்மாற்றம்

இதுவரை காலமும் புலோப்பளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இயங்கிவந்த கிளாலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் அரசர்கேணி கிராமத்தில் இயங்கவுள்ளது.

இப்பாடசாலையில் கல்வி பயில விரும்பும் மாணவர்களை, கோட்டக் கல்வி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (115)

### காசுக்கட்டளை அனுப்பும் சேவை துரிதகதியில்

துரிதகதியில் - தொலைநகல் மூலம் காசுக்கட்டளையை அனுப்பும் சேவையை, கொக்குவில் தபால் நிலையம் நேற்று ஆரம்பித்தது.

யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவசுப்பிரமணியத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேறபடி சேவை மூலம் - பொதுமக்கள் இரண்டு மணிநேரத்திற்குள் பணத்தை அனுப்பமுடியும் என அஞ்சல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### திருத்தப்படாத வீதி

நீர்வேலிச் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவனுக்குச் செல்லும் பிரதான வீதியில், மாசிவன் வரையிலான பகுதி நீண்டகாலமாகச் சேதமுற்றநிலையில் காணப்படுகிறது.

இதனால் - வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இந்த வீதியைத் திருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. (77)

### உலக இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

2 ஆவது உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு, இணுவில் பொது நூலகத்தினர் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சிகள் - இன்று மாலை 7 மணிக்கு நிலையத் தலைவர் க.சசிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.(88)

### பளையில் செஞ்சிலுவைக் கிளை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பளைப் பகுதிக்கான கிளைக் காரியாலயம், கடந்த வாரம் பளைப் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணியால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் - கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் உட்படப் பல பிரமுகர்கள கலந்துகொண்டனர்.

### கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

கெருடாவில் தெற்கு, அண்ணா சனசமூக நிலைய ஆதரவில் - மாவீரர் முதன்மைக்காவலர் அருள் நினைவாக மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

### பொங்கல் விழா அடுத்த மாதமே!

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா - அடுத்த மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே நடைபெறும் என்றும், கண்ணகை அம்மன படிப்பு, அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகுமெனவும் கோவில் தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

பஞ்சாங்கத்தில் - இம்மாதம் 17 ஆம் திகதி பொங்கல்விழா நடைபெறுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அன்று பொங்கல் நடைபெறாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

### ஆலயம் புனரமைப்பு

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட வளலாய் பெரிய தம்பிரான் ஆலயம் - வன்செயல் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டது. இக்கோயிலைப் புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சினால் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டு, கோவில் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### அலுவலகம் இடம் மாற்றம்

(புத்தூர்)

யாழ்.வலயக் கல்வித்திணைக்களத்தின் ஆசிரிய ஆலோசகர் பணிமனையோடு இணைந்த அறையில், இதுவரை காலமும் இயங்கிவந்த பிராந்திய ஆங்கில நிலையம், கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் மேற்படி திணைக்களத்தின் திட்டமிடற்பிரிவு அலுவலகத்திற்கு அருகிலுள்ள அறைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. (110)

### நூல் அறிமுகவிழா

பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரன் எழுதிய 'உலகம் பரவிய தமிழின் வேர்: கல்' நூல் அறிமுக விழா, எதிர் வரும் செவ்வாய்க் கிழமை பி.ப 3.30 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் - பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவார்.

# சிறுவர் இல்லப் பொறுப்பாளர் தொடர்ந்து விளக்கமறியலில்!

## சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் முறைகேடுகள் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறுவர் இல்லப் பொறுப்பாளரான, இந்து சமயப் பேரவைச் செயலாளர் க.சக்திகிரீவன மற்றும் சந்தேக நபர்கள் மூவரையும் இம்மாதம் 22 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம், நீதிமன்றில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பாக, சட்டத்தரணி என்.கந்தசாமி ஆஜராகியிருந்தார். சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட பிணை மனுவை நீதிமன்றம் மீண்டும் நிராகரித்தது.

சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 21 சிறுமிகளில் ஆறு பேரின் சட்டவைத்திய அறிக்கையும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### கலாசாரப் பெருவிழா

உலக இந்து மாநாட்டையொட்டி, நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் கலாசாரப் பெருவிழாவின் இறுதி நாளான இன்று - மாலை 4 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் - மங்கள இசை, சொற்பொழிவு, இசைக்கச்சேரி, பட்டிமன்றம், திருமுறைக்கச்சேரி, தென்மராட்சி திலக நர்த்தனாலய மாணவிகளின் நிருத்தியாஞ்சலி, இசை நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

### வேம்படியில் வெற்றிடம்

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் 2005 ஆம் ஆண்டு கலைப்பிரிவில், மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும், ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாகத் தெரிவுசெய்யும் மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

# சட்டவிரோதமான மண் அகழ்வு தென்மராட்சியில் தொடர்கிறது

தென்மராட்சியில் - கச்சாய், மட்டுவில், தச்சன்தோப்பு, சரசாலை ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

இரவு நேரங்களில் - உழவு இயந்திரங்கள் மூலம் சூழலைப் பாதிக்கக்கூடிய விதத்தில் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

பத்திற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இதைத் தடுத்துநிறுத்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது. (37)

# வார்த்தை விளையாட்டு - 32

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | | | 2 கூ | | 3 |
| | 5 வா | | | | ட |
| | | | | | |
| 6 | | | ம் | | |
| | | 7 | | 8 ச | |
| 9 | கை | | | | |

முழுப் பெயர் : ........................................

கற்கும் பாடசாலை : ........................................

கற்கும் தரம் : ........................................

முகவரி : ........................................

.................................... ....................................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்

1. கடிகாரம்.
2. ஒரு ஆபிரிக்கநாடு.
6. நீர் தேங்கிய சிறு குட்டை.
7. பயம்.
9. கொடை.
10. இரக்கம்.



## மேலிருந்து கீழ்

1. நோய்க்கு வழங்கப்படுவது.
2. படையினர் இதை அமைத்து நிலைகொள்வர்.
3. உயிரற்ற உடல்.
5. குரங்கு
8. பிழைக்கு எதிர்ப்பதம்.

## வார்த்தை விளையாட்டு - 31 இன் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அகம்
2. தினை
3. ரயில்
4. சபதம்
8. கஞ்சன்
9. பல
10. கடம்



**மேலிருந்து கீழ்**

1. அரசன்
2. திராட்சை
5. பகல்
6. தஞ்சம்
7. அகிலம்
9. பசி.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 14-05-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 31

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**திருநாவுக்கரசு பிரணவன்**
நா.மு. வீதி,
பருத்தித்துறை.

*2 ஆம் பரிசு -*
**சத்தியோஜதசர்மா சசிதரன்**
கண்ணகை. அம்மன் கோயில்,
.வட்டுக்கோட்டை.

*3 ஆம் பரிசு -*
**அ.டினேஸ்**
167, இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## முயலார் வாங்கிய புதுச்சப்பாத்து

முயலார் ஒரு சோடி புதுச்சப்பாத்து வாங்கினார். அவற்றின் நிறம் கறுப்பு. லேசின் (பிணைகயிற்றின்) நிறம் சிவப்பு, முயலாருக்கு அவற்றை அணிவதிலே மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாயிற்று. சப்பாத்துக்களை அணிந்தபடி கம்பீரமாக வீதிகளில் நடந்தார். நண்பர்களுக்கெல்லாம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டார்.



அவருடைய புளுகையும், பெருமையையும் கேட்டும், கண்டும் எல்லோருக்கும் எரிச்சலும், வெறுப்பும் உண்டாயின. நரியாருக்கும், ஓநாயாருக்குமோ சொல்லமுடியாத அளவுக்கு எரிச்சல்.

"உமது புதுச்சப்பாத்துக்களுக்குப் பதில் சில நல்ல புதிய பழக்கங்களை நீர் கற்றுக்கொண்டால் சிறப்பாயிருக்கும்" என்று நரியார் புறுபுறுத்தார்.

"புதுச்சப்பாத்துக்களால் உமக்கு எந்தவித பயனும் இல்லை. உமது பழைய கிழட்டு முகத்துக்குப் பதிலாகப் புதிய முகத்தை மாற்றிக் கொள்ளும். அது எவ்வளவோ நல்லாயிருக்கும்" என்று ஓநாயார் சீறினார்.

முயலார் இவர்களின் பேச்சைப் பொருட்படுத்தவில்லை. அவர் தொடர்ந்து தம் சப்பாத்துக்களை அணிந்துகொண்டு தலைநிமிர்ந்து நடந்து கொண்டு தான் இருந்தார்.

ஓநாயாருக்கும், நரியாருக்கும் எரிச்சல் வரவர வளரலாயிற்று. "நாங்கள் முயலாருக்குத் தெரியாமல் பதுங்கியிருந்து அவர் மீது பாய்வோம். சாப்பாத்துக்களைப் பறித்து நீரோடைக்குள் எறிந்து விடுவோம். இதுதான் அவருக்கு நாங்கள் படிப்பிக்கக்கூடிய நல்ல பாடம்" என்று ஒருநாள் நரியார் ஓநாயாருக்கு இரகசியமாகச் சொன்னார்.

"நீர் சொல்வது முற்றும் சரி. நாளை முயலார் சந்தைக்குப் போகும் நாள். நாங்கள் எங்காவது ஒளித்திருந்து அப்படியே செய்வோம்" என்று நரியாரின் திட்டத்திற்கு ஓநாயார் தமது சம்மதத்தை அளித்தார்.

அவ்வாறே அடுத்த நாள் முயலார் வரும் வழியில் இருவரும் பதுங்கியிருந்தனர். முயலாருக்கு இது ஒன்றும் தெரியாது. அவர் வழக்கம்போலச் சந்தையிலே பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பினார். அவருடைய வாயில் சீழ்க்கை ஒலி கிளம்பிக் கொண்டிருந்தது. ஆனால், அவர் மனதில் ஒரு கவலை.

"எனது சப்பாத்துச் சிறிதாகிவிட்டது. காலை வெட்டுகிறது. இதை எறிந்து விட்டு இதிலும் பெரிதான ஒருசோடி சப்பாத்து வாங்கவேண்டும். அதன் நிறம் மஞ்சளாயும், லேசின் நிறம் பச்சையாயும் இருந்தால் எவ்வளவு அழகாய் இருக்கும். உம்.... இதற்குப்பணம் வேண்டுமே! என்ன செய்யலாம்?' என்று அவர் யோசித்தபடியே நடந்து நடந்து பக்கத்திலிருந்த மலைக்குன்று ஒன்றின் உச்சிக்கு ஏறிவிட்டார்.

அப்பொழுது கழுகார் மேலே பறந்து கொண்டிருந்தவர் முயலாரைச் சந்தித்தார். "முயலாரே, நீர் வரும் வழியில் நரியாரும், ஓநாயாரும் நீண்ட நேரமாக ஒளிந்திருப்பதைக் கண்டேன். அவர்கள் யாரை எதிர்பார்த்திருக்கிறார்கள்? என்று அவர் முயலாரைக் கேட்டார்.

முயலார் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். அவர்கள் எனக்காகத்தான் காத்திருக்கவேண்டும்.

(அடுத்தவாரம் தொடரும்...)

## கிளிகள் பேசுமா?





சிறிய வயதிலேயே கிளிக்குஞ்சுகளுக்குப் பேசக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒரேயொருவர் மட்டும் தொடர்ந்து கற்றுக் கொடுத்தால் அவருடைய குரலில் பரிச்சயம் ஏற்பட்டுச் சற்றுச் சீக்கிரமாகவே பேசத்தொடங்கிவிடும்.

உலகெங்கிலும் கிளிகள் பேசும் என்ற கருத்து உண்டு. ஆனால், அது பேசுவதில்லை. சொல்வதைத் திரும்பச் சொல்கிறது. சொந்தமாக யோசித்துப்பேசக் கிளிகளுக்குத் தெரியாது. நாம் சொல்வதைக் கேட்டு, அந்த ஒலிகளை அப்படியே அழகாகத் திரும்பச் சொல்லும். குஞ்சுக் கிளிகள் தங்கள் பெற்றோர் வெளியிடும் 'ட்வீட்' சத்தங்கள், குட்டி விசில்கள் போன்றவற்றைத் திரும்பச் சொல்லும். தாய், தந்தையை விட்டு வேறு இடம் கொண்டு செல்லப்பட்டால், அங்கு அது கேட்கும் அத்தனை சத்தங்களையும் திருப்பப்பேசும். அதனால்தான் அது வளரும் வீடுகளில் உள்ளவர்களது பெயர்களையும், வார்த்தைகளையும் பேசமுடிகிறது.

அதற்கு உணவூட்டும் நேரத்தில், அதன் பெயரை அடிக்கடி சொல்லிப் பயிற்சி தரவேண்டும். அது அழகாகத் தன் பெயரை உச்சரிக்கும்வரை சொல்லிக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

தன் பெயரை அது சொல்லத் தொடங்கியதும், சுலபமான வாக்கியங்களைக் (உதாரணமாக, நான் நல்லா இருக்கிறேன்) கற்றுத் தரவேண்டும். அது சரியாகச் சொன்னவுடன், ஏதாவது பரிசு (ஒரு சின்ன கஜூ மாதிரி) கொடுத்துக் கொண்டிருந்தால், வெகுவிரைவிலே கிளிகள் பேசக் கற்றுக்கொள்ளும்.

ஆரம்ப காலத்தில் இருந்தே கிளிகளைச் செல்லப்பிராணிகளாக (பறவைகளாக..!) வளர்த்து இருக்கிறார்கள். கி.மு. 391 இல் எழுதப்பட்ட ஐரோப்பிய இலக்கியங்களில் கிளிகள் பற்றியும், அதன் பேசும் திறன் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

அதன் பிறகு இடைக்காலத்தில் அரசர்களின் பொக்கிஷமாகக் கிளிகள் இருந்திருக்கின்றன. பபிலோனிய சுல்தான், ஃபிரெட்ரிக் - II அரசருக்குத் தனது அன்பின் சின்னமாகக் கிளிகளைத்தான் தந்திருக்கிறார்.

'கிளிகளின் நிலம்' என்றழைக்கப்படுவது அவுஸ்திரேலியா. இங்கு கிட்டத்தட்ட 54 வகைகளுக்குமேல் உள்ளன.

# இளந்தேனீக்கள் கழகம்

## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ச.லூட்ஸ் விதுஷா
கற்கும் பாடசாலை :-
ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :-
மு.நிவிதா
கற்கும் பாடசாலை :-
மாணிக்க வாசகர் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :
பாட்டு, விளையாட்டு.



முழுப்பெயர் :-
ம.நிருபன்
கற்கும் பாடசாலை :-
வல்வை சிவகுரு வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், சமயம், தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :-
ம.ஜனகன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், துடுப்பாட்டம், நாடகம்.

முழுப்பெயர்:-
யே.மரியமெற்றிலீன்
கற்கும் பாடசாலை :-
கிளி.பளை றோ.க.த.க. பாடசாலை.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, ரீ.வி.பார்த்தல், பத்திரிகை வாசித்தல், சமயம்.

முழுப்பெயர்:-
சி.கெங்காகரன்
கற்கும் பாடசாலை :-
யூனியன் கல்லூரி.
கற்கும் தரம் :-6
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், பேனா நட்பு.

முழுப்பெயர்:-
இ.ராஜி
கற்கும் பாடசாலை :- கொக்குவில் இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கவிதை எழுதுதல்.

முழுப்பெயர்:-
சி.சுகனியா
கற்கும் பாடசாலை :-
கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரி.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்.

# வழிகாட்டுங்கள்



அம்புக்குறி வழியாக நுழைந்து உச்சியில் நிற்பவருடன் இணைந்து கொள்வதற்கு இந்த மனிதனுக்கு வழிகாட்டுங்கள்.

# My Self

My name is Jameela. My father's name is Mukunthan. My mother's name is Rajani. I am eleven years old. My school name is J/Valvetty Hindu Tamil mixed school. My friends are Asha and Nithiya. My favourite subjects are English and Tamil. I want to be a teacher.

*M.Jameela*
*Grade - 6*

# விடுகதைகளும் விடைகளும்

1. மேடு கண்டால் ஒதுங்குவார், பள்ளம் கண்டால் பதுங்குவார். அவர் யார்?
   தண்ணீர்.
2. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில் ஓட்டை. அது என்ன?
   உழுந்துவடை
3. மரத்திலோ இலை வடிவம், அரைத்தாலோ கலைவடிவம். அது என்ன?
   மருதாணி
4. அடித்தாலும் அழமாட்டாள், முறுக்கினால் முணுமுணுப்பாள். அவள் யார்?
   வானொலிப் பெட்டி
5. மணி அடித்ததும் மலைப்பாம்பு ஊருது. அது என்ன?
   ரயில் வண்டி
6. வீதிக்கு துணைவருவான், வீட்டுக்குள் வரமாட்டான். அவன்யார்?
   செருப்பு
7. ஊசி மூக்கன் சந்தைக்குப் போவான். அவன் யார்?
   இறால்
8. காவல் வீரன் காக்கியணிய மாட்டான். அவன் யார்?
   நாய்
9. காற்றைக் குடிக்கும் காற்றிலே மிதக்கும் அது என்ன?
   பலூன்

வே.பிரார்த்தனா,
மருதடி, வல்வெட்டி.

---

1. ஏறும் இறங்காது. அது என்ன?
2. நான் பார்த்த படம் வேறு யாரும் பார்க்க முடியாது. அது என்ன?
3. கட்டையன், கறுவலன், காவலுக்கு வீரன். அவன் யார்?
4. காய், பூ, இலை சாப்பிடலாம், கனிமட்டும் சாப்பிட முடியாது. அது என்ன?
5. குதிரை ஓடஓட வால் குறையுது. அது என்ன?
6. முதுகெலும்பு இல்லாத மாடு முள்ளில்லாப் பற்றைக்குள் மேயுது. அது என்ன?
7. குளிக்கலாம் குடிக்க முடியாது அது என்ன?

விடைகள்
1. வயது
2. கனவு
3. திறப்பு
4. முருங்கை
5. ஊசியும் நூலும்
6. பேன்
7. வியர்வை



ப.மதிவதனி,
தரம் - 6
மகாஜனாக் கல்லூரி.

# உங்கள் கைவண்ணம்

*ம.மயூரி*
*தரம் - 9*
*பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.*





*உ.சிந்துஜா,*
*தரம் - 5,*
*தம்பசிட்டி மே.மி.த.க பாடசாலை.*

# தகவல் தொகுப்பு

- அவுஸ்திரேலியாவின் தேசியச் சின்னம் கங்காரு. தேசிய விலங்கும் அதுவே.
- உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் டவரின் உயரம் 985 அடி.
- தற்போது அது கம்பியில்லாத் தொடர்பு மையமாகப் (wireless communication centre) பயன்படுகிறது.
- அமெரிக்காவின் சுப்பீரியர் ஏரிதான் உலகின் மிகப் பெரிய புது நீர்ப்பெருக்கு ஏரி.
- உலகின் 3,50,000க்கும் அதிகமான தாவர வகைகள் உள்ளன. அவற்றுள் 3 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக இருந்துவரும் ஒரே தாவரம் நம் எல்லோருக்கும் தெரிந்த பாசி.
- மே∴ப்ளை என்னும் பூச்சியினம்தான் மிகக் குறைந்த ஆயுட்காலம் கொண்ட பூச்சியினம் (4-5 மணி நேரம்) க்வின் டெர்மைட்டுகள் அதிக ஆயுட்காலம் கொண்டவை (15-20 வருடங்கள்).
- உலகின் மிக நீளமான இரு நதிகள் அமேசன், நைல்.
- பூமியின் பெரும் பகுதியை நீர் ஆக்கிரமித்து இருந்தாலும், பூமியிலுள்ள பெருங்கடல்கள் நான்கே நான்குதான். அவை பசுபிக், அட்லாண்டிக், இந்து சமுத்திரம் மற்றும் ஆர்ட்டிக்.
- மிகமிகச் சிறிய பூக்கள் லொல்∴பியா அங்கஸ்டா என்ற தாவரத்தில் பூக்கின்றன. இந்த பூக்களின் அளவு 0.5 மி.மீ.
- சூரிய வெளிச்சத்தில் VIBGYOR என்னும் ஏழு வண்ணங்கள் இருப்பதை நிரூபித்தவர் சேர் ஐசக் நியூட்டன்.
- கார்லோஸ் லினேயஸ் (கார்ல் வோன் லின்) பதினெட்டாம் நூற்றாண்டில் கண்டறிந்த முறையை வைத்துத்தான் இன்றும் உயிரினங்கள் இனம் பிரிக்கப்படுகின்றன.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

.................. திகதி          .............................. ஒப்பம்

.............................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம்          .............................. பெற்றோர் ஒப்பம்

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- திருக்குறள்

# நமது நோக்கு

## படைத்தரப்பிலிருந்து படைத்தரப்புக்காக...!

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக - அரசாங்கம் தான் பெரிதும் எதிர்பார்த்திருந்ததாகக் காட்டிவந்த - இந்திய இராணுவ ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கை, அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பப்படுவதற்கு முன்னரே - ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதோடு, ஊடகங்களுக்குப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் தலைவரூடாகவும் வெளித்தெரிய வந்திருக்கிறது.

இந்த அறிக்கைபற்றி வெளிவந்த தகவல்களினடிப்படையில் - உயர்பாதுகாப்பு வலயத்தில், மக்கள் மீள்குடியேற அனுமதிப்பதான விடயத்தைவிட - அவர், படையினர் நலன் சம்பந்தப்படும் விவகாரங்களிலேயே கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதை அறியமுடிகின்றது.

அரசாங்கப் படைகளின் தரப்பிலிருந்து, அவர்களின் நிலைப்பாடு, பிரச்சினைகள், சந்தேகங்கள் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதை நோக்கும்போது - நம்பியாரின் அறிக்கைக்கு அரசாங்கம் கொடுத்துவந்த முக்கியத்துவமும் புலனாகின்றது.

நம்பியார் தனக்கிடப்பட்ட பணியையும் கடந்து - விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளில் படையினர் சந்தேகம் கொண்டிருப்பதாகவும், அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் பற்றியும் கவனஞ்செலுத்தி - அவற்றினடிப்படையில் தனது இறுதி அறிக்கையைத் தயாரித்திருப்பது - நம்பியாரின் ஆலோசனைகள் தமிழ் மக்கள் தரப்பிலிருந்தான பிரச்சினைகளிலிருந்து வெகுதூரம் தள்ளிநிற்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

உயர்பாதுகாப்பு வலயங்களைப் பொறுத்தவரையில் - அவற்றுள் சிலவற்றை அகற்றவேண்டியது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது பற்றி நம்பியார் கூறினாலும் - இதற்கான கால எல்லையை 'பொருத்தமான கட்டங்கள்' என்றே குறிப்பிடுவதை நோக்கவேண்டும்.

இந்தப் 'பொருத்தமான கட்டங்கள்' எவை என்பதைப் படைத்தரப்பே தீர்மானிக்கும் என்பதாலும் - பலாலி விமானத் தளம், காங்கேசன்துறை துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம் உள்ளடங்கிய பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்படுமே தவிர அகற்றப்படாது என்பதும் - மக்கள் மீள்குடியமர்வு இப்பிரதேசங்களில் சாத்தியப்பாடாகும் வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்கமற்ற தன்மையையே காட்டுகிறது.

இதற்கும் மேலாக - நம்பியாரின், உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு தொடர்பான முன்னைய நிபந்தனைகள்- இறுதி அறிக்கையிலும் வேறொரு வடிவத்தில் இடம்பெறுவது மிகமுக்கியமான விடயமாகின்றது.

'உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றும் அல்லது சிறுப்பிக்கும் சிபார்சுகள், வேறு சில நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டால் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட அனுமதிக்கப்படவேண்டும்' எனக் குறிப்பிடும் நம்பியார்,

விடுதலைப் புலிகளின் நீண்ட தூர ஆயுதங்கள் சர்வதேசக் கண்காணிப்பின்கீழ் வைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையைக் கொண்டுவருகிறார்.

கடந்தமுறை, இதேவிவகாரம் கிளப்பிய சர்ச்சையைச் சமாளிக்குமாப்போல - படையினரின் நீண்ட தூர ஆயுதங்களும் கண்காணிப்பின் கீழ் வரவேண்டுமென சிபார்சு செய்கிறார்.

இது - உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாகியதற்கான தேவை ஏற்பட, புலிகளின் நீண்ட தூர ஆயுதங்களே என்பதாகக் காரணமும் கற்பிக்கின்றார் நம்பியார்.

இந்தவேளையில், ஓரிரு தினங்களுக்கு முன்னர் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சியில் வழங்கிய செவ்வியில் -

'விடுதலைப் புலிகளின் ஆட்லறிகள் வன்னிக் காடுகளிலேயே இருக்கின்றன. அவை, குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயங்களைத் தாக்கக்கூடியதாக நிறுத்தப்படவில்லை' எனக் குறிப்பிட்டிருப்பதை இங்கு சுட்டிக்காட்டவே வேண்டும்.

அத்தோடு - உயர்பாதுகாப்பு வலயங்களைப் படையினர் உருவாக்கியதற்கான காரணம் - விடுதலைப் புலிகளின் நீண்டதூர ஆயுதங்களிலேயே தங்கியிருக்கிறது என்பதும் பொருத்தமற்றதாகும்.

விடுதலைப் புலிகள் - நீண்டதூர ஆயுதங்களை, ஆட்லறிகளைப் பயன்படுத்த முன்னரே - வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்கள் பலமைல் சுற்றளவை வளைத்து உருவாக்கப்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது.

இங்கும் - இடம்பெயர்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை என்பதை நம்பியார் 'திட்டமிட்டே மறந்துவிட்டார்' என்பதையும் குறிப்பிடவேண்டியதாகவுள்ளது.

முற்றிலுமாக இராணுவ நலனுக்குள் நின்றுகொண்டு அறிக்கை தந்திருக்கும் நம்பியார் - நம்பிக்கையை வளர்க்கும் செயற்பாடுகளாகக் குறிப்பிடும் நடவடிக்கைகளில், ஏ-9 வீதியினூடான படையினரின் பயணம் பற்றிச் சொல்கையில் - விடுதலைப் புலிகளின் சோதனைகள், புலிகளின் பாதுகாப்பு போன்றவற்றை படையினருக்கு நீக்க வேண்டும் எனக் கூறுவதானது - 'படைச்சமநிலை' பற்றிய விடயத்திற்கு முற்றிலும் முரணானது என்பதையும் கவனிக்க வேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும் புலிகளுக்கு ஓர் நீதி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழையும் படையினருக்கு ஒரு நீதி என்பது - நம்பியாரைப் பொறுத்தளவில் நியாயமாயிருக்கலாமே தவிர, படைச்சமநிலைக்கு எவ்வகையில் நியாயத்திற்குரியது என்பதை - இராணுவ அறிவுடைய எவரும் கூறார்.

அதேவேளை - கண்காணிப்புக்குழுவில் நோர்டிக் நாடுகளுடன், வேறுசில நாடுகளும் இணைக்கப்பட வேண்டும் என்றும் கூறி - எதிர்க்கட்சிகள் சிலநாட்களுக்கு முன்னர் வைத்த கோரிக்கைகளையும் நினைவுபடுத்துகிறார் நம்பியார்.

மொத்தத்தில் நம்பியாரின் அறிக்கையானது - படைத்தரப்பின் பார்வையை, நோக்குகளை, கருத்துக்களை காண்பித்திருக்கும் அறிக்கை என்பதோடு -

அமைச்சர் ராஜித சேனாரட்ண நாடாளுமன்றத்தில் தெரிவித்த 'நம்பியார் - எமது அரசாங்கத்தின் சம்பளத்திற்காக வரவில்லை, இந்திய அரசின் அனுமதியுடன்தான் வந்திருக்கிறார்' என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டியதாகிறது.

# யாழ்.பிராந்திய இந்து மாநாடு கோலாகலமாக நேற்று ஆரம்பம்

## பல்வேறு கலைநிகழ்வுகளும் நடந்தேறின

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் யாழ்ப்பாணப் பிராந்திய மாநாட்டு நிகழ்வுகள் நேற்று மிகச்சிறப்பாக ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாநாட்டின் முதல்நிகழ்வாக காலை 8.15 மணிக்கு திருநெல்வேலி சிவன் கோவிலிலிருந்து மங்களகரமான எழுச்சி ஊர்வலம் ஆரம்பித்து, நல்லூர் முருகன் ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், ஊர்வலம் நல்லை ஆதீனத்தை வந்தடைந்தது.

பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் - மங்கள விளக்கினை யாழ். மாவட்ட அரச அதிபர் பத்மநாதன், இந்துகலாசார அமைச்சர் மகேஸ்வரன், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவி கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து நந்திக்கொடியினை அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன் ஏற்றிவைக்க, இந்து மாநாட்டுக் கொடியினை யாழ்.அரச அதிபரும், அமைச்சர் மகேஸ்வரனும் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை இந்து விவகார அமைச்சின் யாழ்.செயலக உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கமும், ஆசியுரையினை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி மகேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரையை அரச அதிபர் பத்மநாதன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோரும் நிகழ்த்தினர்.

மாநாட்டுத் தொடக்கவுரையினைக் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்த, சிறப்புரையை இந்து சமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் வழங்கினார்.

தொடர்ந்து திருமுறை அரங்கு, இளைஞர் அரங்கு, பண்ணிசைக் கச்சேரி, கவியரங்கம், நாடகம் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த தமிழ் அறிஞர்கள், இந்துமத குருமார்கள், சைவ அறிஞர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு ஐம்பதாயிரம் தண்டம்!

## புதிதாக வருகிறது சட்டம்

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு, ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகள் தொடர்பாகவும், அதை மீறுவோர் மீதான தண்டனைகள் தொடர்பாகவும் ஆராய, அரசாங்கம் குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக்குழு நடத்திய விசாரணைகளிலேயே, போக்குவரத்து விதிகளை மீறி - மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் தொகை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் - குறைந்த தண்டனை அல்லது தண்டப்பணத்தைச் செலுத்திவிட்டுத் தப்பிவிடுகின்றனர். இதனால், மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை முற்றாகக் கட்டுப்படுத்தவே, இக்குற்றத்தைப் புரிவோருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் - இனிவரும் காலத்தில் மரதன் ஓட்டப்போட்டிகள், சைக்கிளோட்டப் போட்டிகளை நடத்துவோர் - பொலிஸாரின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்றும், இதன் மூலம் போக்குவரத்து ஒழுங்குகளைச் சீர்செய்யமுடியும் என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.



அம்பாறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற காணிப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில், கலந்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகளை முதலாவது படத்திலும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.
படங்கள் :- சலீம்

# ரயில் நிலையங்களின் பராமரிப்பு இனி தனியார் நிறுவனங்களிடம்!

ரயில் நிலையங்களைத் தனியார் நிறுவனங்களின் பராமரிப்பில் விடுவதற்கு, ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் பிரியால் டி சில்வா தெரிவித்தார்.

முதற்கட்டமாக - கோட்டை, மருதானை, கறுவாத்தோட்டம் செயலகத் தரிப்பிட ரயில் நிலையங்கள் - தனியார் நிறுவனங்களின் பராமரிப்பில் விடப்படவுள்ளன. நான்கு தனியார் நிறுவனங்களிடம் இந்த ரயில் நிலையங்களின் பராமரிப்புப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்தத் தனியார் நிறுவனங்கள் - ரயில் நிலையப் பராமரிப்பை மேற்கொள்வதற்காகத் தமது நிறுவன விளம்பரங்களையும் அங்கு காட்சிப்படுத்தமுடியும்.

மேற்படி ரயில் நிலையங்களின் சுத்திகரிப்பு மற்றும் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளையும் இந்த நிறுவனங்களே வழங்கவுள்ளன.

மாதமொன்றுக்கு - கோட்டை ரயில் நிலையப் பராமரிப்புக்கு 10 லட்சம் ரூபாவும், மருதானை ரயில் நிலையத்துக்கு 4 முதல் 5 லட்சம் ரூபாவும் செலவிடப்பட்டு வந்தது.

இந்தப் பராமரிப்புப்பணிகளை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்துள்ளதால் - இதுவரை இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் வேறு பணிகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

ரயில்வே திணைக்களம் இந்த முடிவு எடுத்தமைக்கு நிதிப்பற்றாக்குறையே காரணம் என்று ரயில்வே பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

- இவ்வாறு, தனியார் நிறுவனங்களிடம் பராமரிப்புப்பணி ஒப்படைக்கப்பட்டதால் அரசாங்கத்திடம் நிதியைக கோரவேண்டிய தேவை தமக்கு இல்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கண்டி - கொழும்பு ரயில் பயணச்சீட்டு வழங்கும்முறை, தனியார் நிறுவன ஆதரவுடன் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது. மிட்சுயி, சமுத்ரா நிறுவனங்களின் ஆதரவில் இந்தமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்கள், இதற்காக - ரயில்களில் தமது விளம்பரங்களை வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்காணிப்புப் பணிக்கு புதியவர்கள் வேண்டும்!

## மகிந்த ராஜபக்ஷ கோருகிறார்

போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் இப்போது ஈடுபட்டுள்ள பிரதிநிதிகளை இடமாற்றிவிட்டு, புதியவர்களை நியமிக்கவேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இப்போது பணியில் ஈடுபட்டுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் - புலிகளுக்குச் சார்பாகவே நடந்துவருகின்றனர். இதனால், இவர்களை இடமாற்றிவிட்டு, புதியவர்களை நியமிக்கவேண்டும்.

மேலும் - நாட்டில் அமைதியைத் தோற்றுவிக்கமுடியாத ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்றும் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

# இந்திய-பாகிஸ்தான் ராஜதந்திர உரையாடலும் சமாதான அரசியலுக்கான கள நிலைவரமும்!

உலக அரசியல் - மேற்காசியாவினை முழுமையாகக் கைவிடாத நிலையிலும், தென்னாசிய அரசியல் கடந்த இரண்டு, மூன்று வாரங்களாகச் சூடுபிடித்துள்ளது. ஈராக் இயல்புநிலை - அரைகுறையாக வேகிய அல்லது வேகாதநிலையில் பாலஸ்தீன சமாதானப் பயணம் ஆரம்பமாகிவிட்டது.



இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

அதுவே, இன்று மேற்காசியர்களுக்கு உரித்துடைய அரசியலாக உலகத்தினால் பார்க்கப்படுகின்ற நிலையை அமெரிக்கா உருவாக்கியுள்ளது. ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கமுடியாத பிரச்சினைக்கு ஆள்மாற்றம் செய்யும் புதிய பாணி அண்மையில் அரங்கேறியது.

ஆனால், பாலஸ்தீனர் வாழும் பகுதியில் மரண ஓலங்கள் முடிந்ததாகத் தகவலில்லை. இந்த நிலையில் இவ்வாரம் மீண்டும் தென்னாசிய அரசியலில் எழுந்துள்ள புதிய சமாதான, இராஜதந்திர அரசியற் களத்தைப் பரிசீலிப்போம்.

தென்னாசிய சமாதான அரசியற் களம் - சுவையாகவும், அதேநேரம் பிரமிப்பினை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. அரசறிவியலைக் கற்கும் எல்லோருக்கும், அரசியலை நகர்த்த முடியாமல் திண்டாடும் கீழைத்தேச அரசியல்வாதிகளுக்கும் நல்ல அனுபவத்தினையும், பாடத்தையும் ஏற்படுத்தக்கூடிய அரசியல் இங்குநிகழ்ந்து வருகின்றது. இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்குச் சளைத்தவரல்ல பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாராப் என்று உணர்த்தப்படும் பாடம் புதியது அல்ல.

ஆக்ராவில் - முஷாரப் காட்டிய தன் இன்னோர் பக்கமே, தற்போது நடக்கும் சமாதான இராஜதந்திர அரசியலாகும். இதில் அமெரிக்கர்களும் தமது பங்குக்கு மூக்கை நுழைத்துள்ளனர். அமெரிக்கர்கள் யார் பக்கம் என்பது இதேபத்தியில் பல தடவை சொல்லப்பட்டுவிட்டது.

ஆனால், அவர்கள் தற்போது நகர்த்தும் புதிய நகர்வு எதுவென்பதே கவனிக்கப்படவேண்டிய அம்சம். அதனைப் பார்ப்பதற்கு, இந்திய - பாகிஸ்தான் சமாதான இராஜதந்திர அரசியலை முதலில் விளங்கிக் கொள்வோம்.

இந்திய - பாகிஸ்தான் சமாதானம் பற்றிய உரையாடல், இரண்டு நாட்டுப் பிரதமர்களினாலும் மேற்கொள்ளப்படுகிறது என்பதை உணர முடிகின்றது.

இந்தச் சூழலில் பாகிஸ்தான் பிரதமர் - இந்தியப் பிரதமரின் நேசக்கரத்தையடுத்துப் பல நல்லிணக்கச் சமிக்ஞைகளை இந்தியாவுக்கு வெளிப்படுத்தினார். இந்தியப் பிரதமருக்குப் பாகிஸ்தானுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அதற்கு இந்தியத்தரப்பு அவ்வளவு திருப்தியாகப் பதில் அனுப்பவில்லை. அத்தகைய அழைப்பை நிராகரித்த இந்தியப் பிரதமர், திடீரென இந்தியா - பாகிஸ்தானுக்கிடையில் தடைப்பட்டுப் போன போக்குவரத்தை மீளவும் ஆரம்பிக்கப்போவதாக உறுதியளித்தார்.

பாகிஸ்தானியப் பிரதமர் ஜபாருல்லா கான் ஜமாலியும் பதிலுக்குக் கிரிக்கெட் விளையாட்டில் கையை வைத்து, மீளவும் இரண்டு நாட்டு கிரிக்கெட் அணிகளும் விளையாடுமெனவும், அதற்குப் பாகிஸ்தான் தயாராகவுள்ளது எனவும் பதிலளிக்கும் பாணியில் தகவலை வெளியிட்டார்.

இச்சம்பாஷணை - இதனுடன் முடிவுக்கு வரவில்லை. மீண்டும் இந்தியப் பிரதமர் தாம் விலக்கிக் கொண்ட தூதுவரைப் பாகிஸ்தானுக்கு நியமிக்கப் போவதாக அறிவித்தார். பாகிஸ்தான் பக்கத்திலிருந்து அதற்கான பதில் சாதகமானதாக அமைந்தது.

இக்காலத்தில் - இதனை அவதானித்த உலகம், மகிழ்ச்சியடைந்ததாகவும், இந்திய - பாகிஸ்தான் உறவு பலப்படுவது சிறப்பான அரசியலையும், சமாதானத்தையும் தெற்காசியாவில் ஏற்படுத்துமெனவும் கூறியது.

குறிப்பாக - பிரித்தானியா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா என்பன வரவேற்றாலும் அமெரிக்கர்களே முதலில் வரவேற்று இரு தலைவர்களையும் பாராட்டினர்.

அத்தகைய சுவையான சம்பாஷணைக்குப் பின்பு, பாகிஸ்தான் பிரதமர் புதிய அறைகூவல் ஒன்றை இந்தியா நோக்கி வீசினார். அது - இந்தியர்கள் எதிர்பார்க்காத, சிலவேளைகளில் பாகிஸ்தானியர் கூட ஊகித்து உணராத அணுவாயுத அழிப்பு அறைகூவலாகும்.

வாஜ்பாய் வியர்த்து விறுவிறுத்துப் போயிருப்பார். ஏன் பாரதீய ஜனதாக்கட்சியே அதிர்ச்சியடைந்திருக்கும். இது நிச்சயமாகப் பாகிஸ்தானியர் நினைத்து வெளியிட்ட கருத்தல்ல. மூக்கு நுழைப்பவர்களின் வேலையாகவே அமைந்திருக்கலாம். அவர்களுக்கு உயிரியல், இரசாயன மற்றும் அணுவாயுதங்கள்தான் பிரச்சினையாகவுள்ளது. சதாம் ஹூசைனை அவசரப்பட்டு வீழ்த்தியதற்கு அணுவாயுதப் பயமும் ஒரு காரணமாகும்.

வாஜ்பாய் - முஷாரப் சம்பாஷணை ஓய்ந்துள்ளது. ஆனால், பரஸ்பரம் தமது நாடுகளுக்குள் உரைநிகழ்த்தும்போது, சமாதானம் என்ற பாடத்தினை இரு தலைவர்களும் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதிலும் இந்தியப் பிரதமர் சமாதானத்துக்காக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார்.

அங்கு முஷாரப்பின் வாய் அடைக்கப்பட்டதுபோல், இந்தியா பக்கம் பிரதிப் பிரதம மந்திரி அத்வானியின் வாய்க்குப் பூட்டுப் போட்டுள்ளார்கள்போல் தெரிகின்றது. அதற்குள் காட்சிமாற்றம் ஏற்பட்டுவிட்டது.

தற்போது - இஸ்லாமாபாத்தில் உரையாடிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜும், அவரது குழுவும் இந்திய - பாகிஸ்தான் சமாதான அரசியலில் புதிய பல திசைகளைத் திறந்துவிட்டுள்ளன.

ஆர்மிரேஜின் வருகை - முதலில் இஸ்லாமாபாத்திலும், பின்னர் காபூலிலும், இறுதியாகப் புதுடெல்கியிலும் எனத் தீர்மானிக்கப்பட்டதே ஒரு இராஜதந்திர நகர்வாகும்.



பாகிஸ்தான் பிரதமருடன் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்

இந்தியாவை எப்படி அமெரிக்கர்கள் மதிப்பிட்டுள்ளார்கள் என்பதும், பிரச்சினையின் பக்கத்தில் அவர்களது போக்கு எப்படி அமையும் என்பதனையும் விளங்கிக்கொள்ளப் போதுமானது.

இஸ்லாமாபாத்தில் நடந்த சந்திப்பின் பின் ஆர்மிரேஜ் குறிப்பிடும்போது - இரு நாடுகளும் சமாதான வழிமுறைகளில் பேசித்தீர்க்கவேண்டும் என்றும், மிகநீண்ட காலமாகத் தீர்க்கப்படாத காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியோடு தாம் கலந்துரையாடியபோது அவர் - தற்போது இந்தியாவுக்குள் நுழையும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தி வருவதாகவும், ஆரம்பத்தில் இருந்ததைவிட மிகக்குறுகிய அளவிலேயே அது நிகழ்வதாகவும் தமக்குத் தெரிவித்ததாக ஆர்மிரேஜ் கூறினார்.

இதிலிருந்து, ஆர்மிரேஜ் இரண்டு பிரச்சினைகளை இந்தியாவுக்குக் காட்டியுள்ளார்.

ஒன்று - பாகிஸ்தான் மீதும், அதன் ஆட்சியாளர் மீதும் பூரண நம்பிக்கை தமக்கு உண்டு என்பதைப் பூடகமாக வெளிப்படுத்திவிட்டார்.

இரண்டாவது - தீர்க்கப்படாத காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதாகும். இதில் காஷ்மீர்ப் பிரச்சினையை முன்வைத்தபோதே, ஆக்ரா உச்சிமாநாடு தோல்வியில் முடிந்ததென்பது ஆர்மிரேஜுக்குத் தெரியாததொன்றல்ல. அதை

**கே.ரீ.கணேசலிங்கம்**

நன்கு விளங்கிக்கொண்டே இக்கருத்தை அவர் முன்வைத்துள்ளார்.

இது - சமாதான அரசியலை ஊக்குவிப்பது என்பதைவிட, ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கையாகவே அமையும்.

இதில், அமெரிக்கர்களின் இன்னோர் அரசியல் வியூகமும் மறைந்துள்ளது. அதாவது, பாகிஸ்தான் ஜனாதிபதிக்குப் பதிலாக உருவெடுத்துள்ள பாகிஸ்தான் பிரதமரும், அவரது கூட்டுக்கட்சிகளும் -முஷாரப்பின் ஆட்சி கவிழ்க்கப்பட்டோ அல்லது முடிவுக்கு வந்த பின்போ அமெரிக்கர்களுக்கும், அவர்களது நலன்களுக்கும் அவசியமானவர்கள்.

தனித்து ஒரு ஆட்சியாளரை நம்பி அமெரிக்கர்கள் இப்போது எந்த நாட்டிலும் ஆட்சியை அணுகுவதில்லை. ★

## உலக இந்து மாநாட்டில் இன்று மகளிர் அரங்கு

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் மகளிர் அரங்கு, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் பி.ப 1 மணிவரை இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், விரிவுரையாளர் ஜெயமலர் தியாகலிங்கம், உதவி விரிவுரையாளர் செல்வஅம்பிகை நடராஜா, மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராசா, விரிவுரையாளர் மலர் சின்னையா, விரிவுரையாளர் பகீரதி ஜீவேஸ்வரா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## பழுதடைந்த நிலையிலுள்ள பிரதேச செயலக வாகனம்

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலகப் பாவனைக்கென வழங்கப்பட்ட ஓட்டோ வாகனம் - பழுதடைந்து பயன்படுத்த முடியாதநிலையில் பல மாதங்களாகத் தரித்து நிற்கின்றது.

முன்னர் - கரவெட்டிப் பிரதேச செயலகப் பாவனைக்கெனப் பிக்கப் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், அந்த வாகனம் பின்னர் மருதங்கேணி பிரதேச செயலகத்தின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக இந்த ஓட்டோ வழங்கப்பட்டது.

வழங்கப்பட்டபொழுதே அது நல்ல நிலையில் இருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. இதனைத் திருத்துவதற்குப் பல ஆயிரம் ரூபா செலவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், தற்பொழுது மாற்று ஏற்பாடாகப் பருத்தித்துறை பிரதேச செயலகமும், கரவெட்டி பிரதேச செயலகமும் ஒரு பிக்கப் வாகனத்தினை ஒன்றுவிட்டு ஒரு தினம் பயன்படுத்தி வருகின்றன.

## தொலைபேசி கம்பத்துடன் மோதிய வாகனம்

உடுப்பிட்டி - நாவலடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை, வாகனம் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த தொலைபேசிக் கம்பத்துடன் மோதியது. இதில் தொலைபேசிக் கம்பம் சேதமடைந்தது. சாரதி காயமின்றித் தப்பினார்.

## 'என் இதயநாதம்' ஒலிநாடா அறிமுகவிழா

இளவாலையைச் சேர்ந்த ஏ.ஆர். விஜயகுமாரின் தயாரிப்பிலும், இசையமைப்பிலும் உருவான, 'என் இதயநாதம்' என்ற கிறிஸ்தவப் பாடல் ஒலிப்பதிவு நாடாவின் அறிமுகவிழா, நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் - தாளையடி பங்குத்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஒலிநாடாவின் வெளியீடு கடந்த இரண்டாம் திகதி திருகோணமலை பாலையூற்று புனித லூர்து அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற, அமலமரித் தியாகிகளின் வெள்ளி விழா நிகழ்வுகளின்போது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்திலும் மிலாத் விழா

(யாழ்ப்பாணம்)

முகமது நபியின் பிறந்த தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 14 ஆம் திகதி, யாழ்ப்பாணத்திலும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மிலாத் குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

இஸ்லாமிய சமய அறிவுரை நிகழ்ச்சிகள் மற்றும் திருக்குர் ஆன் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## வருடாந்த பொங்கல் விழா

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா - எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும். 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் பின், இவ்வாண்டு பொங்கல்விழா சிறப்புற இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.(24)

## சேதமடைந்த மரங்கள் முறிந்துவிழும் நிலையில்

(தென்மராட்சி)

கடந்த 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் - தென்மராட்சிப் பகுதியில் உள்ள பனை, தென்னை மரங்கள் பல முற்றாக அழிந்துள்ளன. எஞ்சியுள்ள மரங்கள் பலவும் எறிகணை வீச்சுக்களால் சேதமடைந்து காணப் படுகின்றன.

தற்போது தொடங்கியுள்ள காற்றினால், இவை முறிந்துவிழும் அபாயநிலையில் உள்ளன.

மட்டுவில், சரசாலை, கல்வயல், நுணாவில் ஆகிய பகுதிகளில் பெரும்பாலான வீதிகளின் அருகாமையில் உள்ள மரங்களும் இவ்வாறு சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றன.

இதனால், வீதியால் செல்வோர் எந்த நேரமும் மரங்கள் முறிந்து விழலாம் என்ற அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது.

(24)

## மீண்டும் பரவிவரும் பாதீனியம்!

(கோப்பாய்)

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் பாதீனிய செடி மீண்டும் வேகமாகப் பரவிவருகிறது.

அண்மைக்காலத்தில் இப்பகுதிகளில் பெய்த மழையைத் தொடர்ந்து மீண்டும் பாதீனியச் செடி வேகமாக முளைக்க ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களில் சிரமதானப் பணிகள் மூலமும், மருந்து விசிறியும் பெருமளவு பாதீனியச் செடிகள் அழிக்கப்பட்டன. ஆயினும் - அப்பணி, கண்ணிவெடி மற்றும் வெடிபொருட்களின் அபாயம் காரணமாக முற்றுப்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (13)

## 10 அருட்சகோதரர்களுக்கு குருக்களாக அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்டத்தில் பத்து அருட்சகோதரர்கள், எதிர்வரும் 14 ஆம் திகதி, யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் குருக்களாகத் திருநிலைப் படுத்தப்படவுள்ளனர்.

அருட்சகோதரர்களான செ.றெ. றஞ்சிதராஜ், தே.ரவிராஜ், தி.றொ. வசந்தசீலன், மோ.சோபன்ரூபஸ், சா.ஜஸ்ரின், அ.அன்ரனி, அமலராஜன், ம.கான்ஸ்போவா ஆகிய 10 பேருமே புதிய குருக்களாக அபிஷேகம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.மறைமாவட்டத்தின் வரலாற்றில், கூடிய எண்ணிக்கையானோர் குருக்களாகத் திருநிலைப் படுத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும். (119)



அமெரிக்காவின் ரொர்னாடோ பகுதியைத் தாக்கிய சூறாவளிக் காற்றினால் தரைமட்டமான வாகனத் தொழிற்சாலை ஒன்று.



வெப்பம் - பாங்கொக்கையும் விட்டுவைக்கவில்லை. 42 பாகை செல்சியஸ் கொளுத்தும் வெயிலில் - கடற்கரையோரமாக நடந்து, சுகம் பெறும் யானைக்குட்டியும், பாகனும்.

# சீன இரட்டை உளவாளி அமெரிக்காவில் கைது!

அமெரிக்க - சீன இரட்டை உளவாளியாக ( Double Agent) செயற்பட்ட பெண் ஒருவர், அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கத்ரினா லேங் (வயது 49) என்ற இந்தப் பெண், அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப்பிரிவான எவ்.பி.ஐயின் முன்னாள் அதிகாரியிடமிருந்து முக்கிய ஆவணங்களைப் பெற்று, சீன உளவுப்பிரிவுக்கு வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர் தகவலைப் பெற்றுவந்த எவ்.பி.ஐ. அதிகாரியான ஜேம்ஸ் ஸ்மித் இவரின் காதலனாகவும், அதே சமயம் அவரிடமிருந்து சீன உளவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்பவராகவும் இருந்துள்ளார்.

கைதான கத்ரினா அமெரிக்காவிற்கு விசுவாசமானவர் என்றும், எவ்.பி.ஐயின் தவறான அணுகுமுறைகளுக்கு அவர் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார் என்றும், இவரின் வழக்கறிஞர் கூறுகின்றார். இதேவேளை - ஸ்மித்தும் ஆறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாகியுள்ளார்.

இவர்கள் இருவருக்குமிடையில் 1982 ஆம் ஆண்டு முதல் நட்பு இருந்ததாகவும், இருவரும் தமக்கிடையே அமெரிக்க - சீன உளவுத் தகவல்களைப் பரிமாறினர் எனவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்மித் வழங்கிய தகவல்களை, கத்ரினா சீனாவுக்கும் - கத்ரினா கொடுத்த தகவல்களை, ஸ்மித் எவ்.பி.ஜ. உளவு அமைப்பிற்கும் வழங்கினராம். ஒரு கைப்பை ஊடாகவே இந்த உளவுத்தகவல்கள் கத்ரினா வீட்டில்




வைத்து பரிமாற்றப்பட்டு வந்துள்ளன.

இவர்களது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சார்ஸ் வைரஸின் தாக்கம் நீண்ட காலம் நிலைக்கும்!

## சிங்கப்பூரில் நடைபெற்ற ஆய்வுகளில் அம்பலம்

தற்போது வேகமாகப் பரவிவரும் சார்ஸ் நோய், தொடர்ந்தும் பல வருடங்களுக்குத் தாக்கத்தைத் தரக் கூடியதாக இருக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சார்ஸ் நோய்க்கான **Severe Acute Respiratory Syndrome Virus** மாதிரிகள் சிங்கப்பூரில் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டதில் இவ்விடயங்கள் தெரிய வந்துள்ளன.

இந்த ஆய்வுகளில் இருந்து - வைரஸ் பல்வேறு சூழல்களில், பல்வேறு நாடுகளில் காணப்பட்ட போதிலும், வைரஸின் தன்மையில் எவ்வித மாற்றங்களும் காணப்படவில்லையென்று தெரியவந்துள்ளது.



# றிச்சர்ட் ஆர்மிரேஜ் இந்தியா பயணம்

(புதுடெல்கி)

தனது பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கப் பிரதியமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் இந்தியா செல்கிறார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில்

உலகவலம்

தற்போது உருவாகிவரும் நல்லுறவை மேலும் உரமூட்டும் வகையில், ஆர்மிரேஜ்ஜின் இந்திய உபகண்ட விஜயம் அமைகிறது.

இதேவேளை - இந்தியா தனது அணு ஆயுதத்திட்டத்தை கைவிட



வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை, இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நிராகரித்துள்ளார்.

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்திற்கும் இந்தியாவின் திட்டத்திற்கும் இடையில் வேறுபாடு உள்ளது என இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார்.



பக்தாத்தில் மசூதி ஒன்றின் அருகே ஈராக்கியப் பொதுமகன் ஒருவர் பயணம் செய்த கார்மீது அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில், சேதமடைந்த காரைப் படத்தில் காணலாம்.


உ

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்

**இந்து காலாசார அமைச்சின் அனுசரணையுடன்**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் நடாத்தும்**

**2 ஆவது உலக இந்து மாநாட்டின்**
**மாபெரும் விழா**

இடம் :- சாவகச்சேரி இந்துக்கல்லூரி திறந்த வெளி அரங்கம்
காலம்:- 10.05.2003 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி

*நிகழ்ச்சிகள்*

☆ *திருமுறைகள் கையளித்தல்*
(சங்கத்தானை, கந்தசாமி கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்டு, சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூலகத்திற்கு கையளித்தல்)
☆ *மங்கள விளக்கேற்றல்*
☆ *வரவேற்புரை* - (டாக்டர் சு.சி.அருளானந்தம் அவர்கள்)
☆ *திருமுறை முற்றோதலும் பண்ணிசையும்* - (செல்வன் சுப்பிரமணியம் ஶ்ரீவரன்)
☆ *ஆசியுரை தலைமையுரை*
திரு.பீ.என்.சற்குணராசா (தலைவர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)
☆ *பிரதம விருந்தினர் உரை* - திரு.தி.மகேஸ்வரன் (கௌரவ இந்து கலாசார அமைச்சர்)
☆ *சிறப்புரை* - திரு.க.கேதீஸ்வரன் (பிரதேச செயலர், தென்மராட்சி)
☆ *சிறப்பு சொற்பொழிவு*
தமிழக அறிஞர் முனைவர்
I இரா. செல்வக்கணபதி அவர்கள்
தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்
II டாக்டர் A.மலர் அவர்கள்
தமிழகம் (கோவை) பேச்சாளர்
III டாக்டர் திலகவதி சண்முகசுந்தரம்
IV திருமதி லலிதா சுந்தரம் (தமிழகம்)
தமிழகத்தின் முன்னணி நிகழ்சிகளில் முதன்மை பெற்று நிற்கின்ற நாதஸ்வர இசையோடு, தவில் கச்சேரியும் இணைந்து இசைமழை பொழிய, திரு. A.L.பழனிவேல் குழுவினர் இணைந்து வழங்கும்
மாபெரும் இசை நிகழ்ச்சி
(இருபத்தைந்து பேர் இணைந்து வழங்கும் உன்னத நிகழ்ச்சி)
☆ *நன்றியுரை*
திரு.வி.கே.தவராசா (செயலாளர், கைத்தொழில் வணிகர் மன்றம்)
*நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர்*
திரு.ச.இளங்கோ (பொருளாளர், கைத்தொழில் வணிகர் மன்றம்)
விசேட ஒலி, ஒளி அமைப்புக்கள்,
போக்குவரத்து வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

*குறிப்பு:-*
தென்மராட்சி இந்து ஆலயங்களுக்கான, புனரமைப்புக்கான காசோலைகள் அமைச்சரினால் அன்றைய தினம் வழங்கப்படும்.
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அந்தண சிவாச்சாரியார்களையும், ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்."
தென்மராட்சிக்குட்பட்ட வணிகர் மன்றங்களின் நிர்வாகிகளையும், உறுப்பினர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.
தென்மராட்சிக்குட்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தென்னகத்தின் தலைசிறந்த நிகழச்சியை காண்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். ஆசனங்களுக்கு முந்துங்கள். முற்றிலும் இலவசமான நிகழ்வு. அனைவரையும் திரண்டு வந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

விழாக்குழுக்கள்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்.

(சி-916)

மாநாடு சிறக்க வாழ்த்துபவர் -
**V.M.K ஜுவலர்ஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P - 070 - 212989

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சேதமடைந்துள்ள ஏ-9 வீதியின் நிலை



ஆனையிறவுப் பிரதேசத்தில், ஏ-9 வீதியிலுள்ள பாலங்கள் மிகவும் சிதைவடைந்த நிலையிலுள்ளன. இதனால், இவ்வீதியினால் பயணம் செய்யும் பயணிகள், குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். சேதமடைந்திருக்கும் பாலமொன்றைப் படத்தில் காணலாம். (படம்- லிவிங்ஸ்டன்)

## நோர்வே அமைச்சர்கள் இவ்வாரமும் சந்திப்பர்!

நோர்வே வெளிவிவகார அமைச்சரும், பிரதி வெளிவிவகார அமைச்சரும் அடுத்தவார நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் ஆகியோரே- எதிர்வரும் புதன் அல்லது வியாழக்கிழமையில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது, முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளனாகத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## நம்பியாரின்...

இதேவேளை - நம்பியாரின் அறிக்கை உத்தியோகபூர்வமாகக் கிடைத்த பின்னரே, அதுகுறித்து பரிசீலித்துக் கருத்துக் கூறமுடியும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## புலிகளை...

சிக்கல்கள் தீர்க்கப்பட்டதும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். மீண்டும் வன்முறைநிலை தோன்றும் என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து, வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இசைப் பிரியர்களுக்கோர் நற்செய்தி....
வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக
யாழ்.பல்கலைக்கழக முன்னணிப் பாடகர்களும்,
யாழ் - முன்னணி இசைக்கலைஞர்களும்
இணைந்து வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
● வித்தியாசமான அரங்க வடிவமைப்பு
பொன்மாலைப் பொழுது
● யாழ்.முன்னணிக் கலைஞர்களின் சங்கமம்
இடம் : மானிப்பாய் இந்துக் கல்லூரி
காலம் : 11.05.2003 (ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை: நமது ஈழநாடு
யாழ். பல்கலைக்கழக
முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்

# சட்டவிரோத மின்பாவனையாளர்; அதிகாரிகளிடம் பலர் சிக்கினர்!

(அளவெட்டி)

அளவெட்டி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் - சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளை, அப்பகுதிகளுக்குத் திடீரென விரைந்த பொலிஸாரும், மின்சாரசபை அதிகாரிகளும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற, சுமார் 10 இற்கும் அதிகமானோரைக் கண்டுபிடித்துக் குற்றப்பணம் அறவிட்டுச் சென்றனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரேயே இப்பகுதிகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அடுத்த வாரம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் மட்டும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை பூட்டுமாறு, யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. 16 ஆம் திகதி - வெள்ளிக்கிழமை, விடுமுறைதினமாக இருந்தபோதிலும், மக்களின் வசதிகருதி அன்றையதினத்தன்று வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## திருமலைக் கடலில் கைதான போராளிகள் தொடர்ந்து விளக்கமறியலில்

(திருகோணமலை)

நேற்றுமுன்தினம் திருமலை கோணேசர் கடற்பரப்பில், படகில் வைத்துக் கைதான இரண்டு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும், எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கத் திருமலை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நாகரட்ணம் பிரகாஷ், மாட்டின் ரோமியோ ஆகியோரே தடுத்துவைக்கப்பட்டுள்ள போராளிகளாவார். இதேசமயம், விடுதலை செய்யப்பட்ட மற்றைய போராளி, ரடார் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை- படகிலிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் வெடிமருந்துக் கொள்கலன் கடற்படையால் அழிக்கப்பட்டுள்ளது. (01)

## மர்மமான....

காணப்பட்டார்.

கொடிகாமம் பொலீஸாரால், யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சிறுமியின் சடலம், நேற்றையதினம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

சிறுமியின் மரணம் - கொலையா? அல்லது தற்கொலையா? எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - இச்சம்பவம் பற்றி விடுதலைப் புலிகளும் தமது புலன் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

(34,சு,ரா)

## தம்பதியை...

இவர்களைக் காப்பாற்றச் சென்ற இளைஞனை, திருடர்கள் வாளால் வெட்டிவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

அப்பகுதி மக்கள் கூடிச் சுற்றி வளைத்து தேடியவேளை, திருடர் குழுவுடன் இருந்தாகக் கூறப்படும் நிகால் டன்சன் (வயது 38) என்பவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மயக்கமடைந்த நிலையில் இவரும், யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார்.

திருடர் குழுவிலிருந்த ஏனையவர்களையும் தேடும்பணியில் நேற்றிரவு பொலிஸாரும், அப்பகுதி மக்களும் ஈடுபட்டனர். (ச)



நோர்வே நிதியுதவியில், மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினால் உருவாக்கப்பட்ட புதிய அணி, நேற்றுப் பரந்தனில் தனது சர்வதேச தரத்திலான பயிற்சியை முடித்துக்கொண்டபோது எடுத்த படம்.

## தேசிய லொத்தர்சபை; ஜனாதிபதி பொறுப்பேற்பு

பொருளாதார மறுசீரமைப்புத் துறையமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பின் கீழிருந்த தேசிய லொத்தர் சபையை, ஜனாதிபதி சந்திரிகா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நேற்று தன் பொறுப்பின் கீழ் எடுத்துள்ளார்.

இந்நடவடிக்கை தொடர்பாக, அவர் பிரதமர் ரணிலுடன் எந்தவிதமான கலந்தாலோசனைகளையும் செய்யவில்லை எனக் கூறப்படுகிறது. (01)

## இந்திய நிறுவனத்திடமிருந்து கவச உடை கொள்வனவு முயற்சி எதிர்த்து தனியார் நிறுவனம் வழக்கு

கேள்விப்பத்திரம் கோராமல், இராணுவத்துக்கு 32 ஆயிரம் குண்டு துளைக்காத கவச உடைகளைப் பெற்றுக்கொள்ள, இராணுவத் தலைமையகம் எடுத்துள்ள முயற்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்தே, இந்த கவச உடைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இதை ஆட்சேபித்து உள்ளூர் தனியார் நிறுவனம் ஒன்று வழக்குத்தாக்கல் செய்துள்ளது. இது தொடர்பான வழக்கு, எதிர்வரும் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது.

மனுவில் பிரதிவாதிகளாக - பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், இராணுவத் தளபதி லயனல் பலகல்லவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். (01)

## சமாதானப் பேச்சில்...

தீர்க்கும் முயற்சியில் தடைகள் ஏற்படுவது இயற்கையானது. ரோக்கியோ மாநாடு இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. இத்தகைய சந்தர்ப்பம் எதிர்காலத்தில் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்றும் அகாஷி தெரிவித்தார்.

60 நாடுகளும், இருபது சர்வதேச அமைப்புகளும் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில், ஆகக்கூடிய பலனைப் பெறுவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செயற்பட வேண்டும் என்றும் யசுசி அகாஷி கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில், வடக்கையும்-கிழக்கையும் கட்டியெழுப்பி, அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள உலக வங்கி தனியான திட்டமொன்றைச் சமர்ப்பிக்கும் என்று கூறிய அகாஷி- தமிழீழ விடுதலைப் புலிகள், ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவார்களா? என கேள்வி எழுப்பப்பட்டபோது -

அவர்கள் சமாதான முயற்சிகளைவிட்டு விலகமாட்டார்களென நம்பிக்கை தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது குறித்து, ஜப்பான் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்த அகாஷி,

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தாம் பரிசீலனை செய்வதாகவும், நம்பிக்கையீனமும் தப்பான அபிப்பிராயங்களுமே இந்தப்பிரச்சினைக்கு அடிப்படைக்காரணங்கள் எனவும் -

தனது இலங்கை விஜயத்தின் போது, நாட்டில் உள்ள மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதை தாம் அவதானித்ததாகவும் தெரிவித்த அவர் - சர்வதேச சமுகமும், அரசாங்கமும் விடுதலைப் புலிகளுடன் தற்போதைய தடைகளைக் கடந்து சமாதானப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விரும்புவதாகவும் மேலும் கூறினார்.

IIS
A/L 2003
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கணனிக் கற்கைநெறி
Diploma in Information Technology
ஆரம்பமாக இருக்கின்றது.
(மிகக்குறைந்த கட்டணத்தில் 3 மாதகாலப் பயிற்சி நெறி) (சி - 886)
ஆரம்பம்:
பிரிவு 1 : 25.05.2003
பிரிவு 2 : 28.05.2003
பிரிவு 3 : 14.06.2003
காலை 10.00 மணி
INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel. 21 222 2831
Branches:
IIS, Nelliyaddy, Karaveddy
IIS, Main Road, Chankanai

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.